**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.340/2023**

**தேதி : 17.10.2024**

**(வா.சா.1 ) – திரு.M. பாண்டி**

**சாட்சி அழைக்கப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை :(2ம் பிரதிவாதி தரப்பில்)**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வள்ளுவர் தியேட்டர் அருகில் கார் ஒர்க்ஷாப் நடத்தி வருகிறேன். 1ம் பிரதிவாதியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், சிவக்குமார் மூலமாக பழக்கம். சிவக்குமார் பாலசமுத்திரத்தை சேர்ந்தவர். அவர் எனக்கு நண்பர். அவர் செங்கல்சூளையில் மேனேஜராக இருக்கிறார். சிவக்குமாருக்கும் அமுதா எவ்வாறு தெரியும் என்றால் பழக்கத்தின் அடிப்படையில் தெரியும். சிவக்குமார் பாலசமுத்திரத்தில் இருக்கிறார், அமுதா சின்னக்கலையம்புத்தூரை சேர்ந்தவர், அவர்கள் இருவருக்கும் எத்தனை வருடமாக எப்படி பழக்கம் என்று எனக்கு தெரியாது. என்னிடம் பணம் சிவக்குமார் கேட்டாரா, அமுதா கேட்டாரா என்றால் சிவக்குமார் சொல்லி அமுதா கேட்டார்.

2. அமுதாவின் கணவர் பெயர் கிருஷ்ணன். அவர் காய்கறி வியாபாரம் செய்து வந்தார். அவர்களுக்கு ஒரு மகன். நான் பணம் கொடுக்கும் சமயம் அமுதாவும் அவரது கணவரும் ஒன்றாக இருந்தார்களா, பிரிந்துவிட்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அமுதாவும் அவரது கணவரும் பிரிந்து 13 வருடங்கள் ஆகிறது என்றும், உண்மையில் நான் கடன் கொடுத்திருந்தால் அது பற்றி எனக்கு

தெரிந்திருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. அமுதாவின் கணவர் கார் டீலிங் தொழில் செய்து வருகிறார் என்றும், அவரது தூண்டுதலின்பேரில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என் வீட்டில் வைத்து 1ம் பிரதிவாதிக்கு பணம் கடன் கொடுக்கும்போது சிவக்குமார், கதிரேசன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

3. 05.06.2022 அன்று கடன் கொடுத்ததாக சொல்லும் நிலையில், அன்றைய தேதியில் நான் வில்லங்கச்சான்று பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. எதற்காக ஒரு வருடம் கழித்து 30.10.2023 அன்று வில்லங்கச்சான்று பெற்று பார்த்தேன் என்றால் வீட்டை விற்று பணம் தருவதாக அமுதா சொல்லியிருந்தார். பின் தகவல் கிடைத்து வில்லங்கச் சான்று பெற்று பார்த்தேன். எனது அறிவிப்பிலும், வழக்குரையிலும் அமுதா வீட்டை விற்று பணம் தருவதாக கூறியதை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

4. 2ம் பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது. 2ம் பிரதிவாதி 21.08.2023 அன்று சொத்தை கிரையம் பெற்ற நிலையில், நான் 06.11.2023 அன்றுதான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். சொத்தை கிரையம் வாங்கிய ஒரு வாரத்திலேயே 28.08.2023 அன்று 2ம் பிரதிவாதி கவிதாவின் கணவர் வெங்கிடுபதி இறந்துவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் இறந்துவிட்டபடியால் 2ம் பிரதிவாதியால் பதிலறிவிப்பு கொடுக்க இயலவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. சொத்தை வாங்கி ஒரே வாரத்தில் 2ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டபடியால் அவர் சொத்தை ராசி இல்லாத காரணத்தால் ராஜன் என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் தெரியாது. தாவாச்சொத்து தற்போது

முருகன் மகன் ராஜன் என்பவர் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.9 வில்லங்கச்சான்றிழ் 1ம் பிரதிவாதி தாவாச்சொத்தை பொறுத்து 26.02.2015 அன்று பழனிச்சாமி கவுண்டர் என்பவரிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த ஒப்பந்தத்தை 17.08.2023 அன்று அமுதாவும் பழனிச்சாமி கவுண்டரும் ரத்து செய்துகொண்டதாக சொன்னால் அது எனக்கு தெரியாது. கிரைய ரத்து ஆவணம் ஏற்பட்ட நான்கு நாட்கள் கழித்து 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6. பழனிச்சாமி கவுண்டர் 1ம் பிரதிவாதி மீது பழனி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.5/2018 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் 21.06.2023 அன்று சமாதானம் ஏற்பட்டு, கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். கிரைய ஒப்பந்தம் ரத்தான பிறகு 1ம் பிரதிவாதியிடம் நான் தாவாச்சொத்தை கிரையத்திற்கு கேட்டு 1ம் பிரதிவாதி கொடுக்காததால் கோபப்பட்டு இவ்வாறான வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்த பின்னர் அன்றைய தினமே 2ம்பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று நான் மிரட்டியதாகச் சொன்னால் சரியல்ல.

7. 2ம் பிரதிவாதி கவிதாவை எனக்கு நேரடியாக தெரியாது. நான் அனுப்பிய அறிவிப்பில் கவிதாவின் முகவரி மற்றும் அலைபேசி எண்ணை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அமுதா மற்றும் கவிதாவின்

முகவரி மற்றும் அலைபேசி எண் எனக்கு தெரியாது என்றும், கிரைய ஆவணத்தில் உள்ள விபரங்களை பார்த்து அறிவிப்பு அனுப்பினேன் என்றும் சொன்னால் அமுதாவின் அலைபேசி எண் எனக்கு தெரியும். கவிதாவின் விபரங்களை கிரைய ஆவணத்தை பார்த்து அறிவிப்பு அனுப்பினேன்.

8. நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில் 1ம் பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றும், வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை பார்த்து கடனுறுதிச் சீட்டை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொன்னால் சரியல்ல. உண்மையில் கடன் கொடுத்திருந்தாலும் 1ம் பிரதிவாதியிடம் கடனை வசூல் செய்யவேண்டுமே தவிர, 2ம்பிரதிவாதிக்கு செய்துகொடுத்த கிரையத்தை ரத்து செய்ய கோர முடியாது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் பெண்கள் என்பதால் அவர்களை மிரட்டி சொத்துக்களை அடைவதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு செய்து கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது என்றும், தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

2ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தக்கவைத்துக்கொள்ளப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.10.17 18:47:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.